அ.வ.எண்: 32/2021 நாள்: 18.03.2026

வா.சா.1 – கண்ணப்பன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**<u>15 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தாவா வழக்கில் தரப்பினராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் 1 முதல் 14 பிரதிவாதிகளை எதற்காக தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால், கோயில் இடத்தை அவர்களது முன்னோர்கள் கிரையம் கொடுத்துள்ளார்கள் அதனால் அவர்களை சேர்த்துள்ளேன். தாவா சொத்தை கிரையம் கொடுத்ததாக சொல்லப்படும் அந்த மூன்று நபர்களின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நபர்களின் வாரிசு சான்றிதழை பார்த்தால் தான் அவர்களின் வாரிசுகள் 1 முதல் 14 பிரதிவாதிகளா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். மற்ற வாதிகள் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் இது கோவில் இடம், அதனால் அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண் 125/114 ஆகும். மேற்படி சர்வே எண் தவறு என்று சொன்னால் சரியல்ல.

2. தாவா சொத்து தற்பொழுது யார் பெயரில் உள்ளது என்றால்,

தாவாசொத்தை வாங்கிய கண்ணன் மற்றும் முருகேசன் ஆகியோர் பெயரில் உள்ளது. தாவாசொத்தின் மொத்த அளவு என்ன என்றால் 13 ½ சென்ட் ஆகும். தாவா சொத்தில் தற்பொழுது என்ன உள்ளது என்றால் காலி இடமாகத்தான் உள்ளது. தாவா வழக்கில் 15 முதல் 17 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி எதிர் வழக்குரையுடன் கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்த அறிக்கை பற்றி விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தேவகோட்டை வட்டம், புலியாள் உள்வட்டம் முப்பையூர் குரூப் புல எண் 125/14A விஸ்தீரணம் 0.05.50 ஏர்ஸ் பின்பு தேவகோட்டை வட்டாட்சியர் அலுவலக பட்டா மாறுதல் உத்தரவு எண் 2017/0103/23/017617 TR 11.05.2017 –படி பட்டா மாறுதல் செய்யப்பட்டு தற்போது பட்டா எண் 1978–ல்முத்தையா மகன் கண்ணன்(1), பொன்னையா மகன் முருகேசன்(2), ஆகியோர் பெயரில் கூட்டாக கிராம கணக்கில் தாக்கலாகி உள்ளதாக கிராம நிர்வாக அலுவலர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

3. கிராம நிர்வாக அலுவலரின் அறிக்கையை ஒத்துக்கொண்டு தாவா சொத்து தற்போது வேறு நபர்கள் பெயரில் இருப்பதை ஒத்துக்கொண்டு நான் என்ன பரிகாரம் கேட்டு தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவா சொத்து பிள்ளையார் கோவில் கட்டுவதற்காக வாங்கப்பட்ட இடம் ஆகும். ஆனால் கட்ட முடியாமல் காலி இடமாக இருந்தது கோவில் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கும் போது அந்த இடம் வேறு நபர்களின்

பெயரில் இருப்பதாக கூறினார்கள் அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வாதிகளுக்கும் தாவாசொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று பிரதிவாதிகளிடம் பணம் பறிக்கும் நோக்கத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 15 முதல் 17 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.18 16:08:32 +0530